# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 ஆவணி மாதம் 12ம் திகதி தொடக்கம் 18ம் திகதி வரை

## *“பரிசுத்த அவியானவரின் அக்கினியினால் பற்றி எரிந்தவாறு பற்றியெரியச் செய்வோம்”*

01. ஆரம்ப பாடல் புபுது பாடல் இல. 01 “தந்தை மகன் தூய ஆவி……”

02. புகழ்ச்சிக்கான அறிமுகம்: உரோமையர் 8:28-30

**“இவ்வாறு தூய ஆவியார் தமது வலுவற்ற நிலையில் தமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில் எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல் வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காய் பரிந்து பேசுகிறார்.”**

முழு அகிலத்தையும் படைத்த மகோன்னத இறை தந்தை, தாம் அழைத்தவர்கள் மீது காட்டும் எல்லையற்ற அன்பானது தந்தையின் தாயின் அன்பை காட்டியவாறு தாம் தேர்ந்தெடுத்த மக்களை போஷிக்கின்றார். பாதுகாக்கின்றார். அவர்களது வாழ்வில் நிகழ்கின்ற அனைத்து அதாவது நன்மை தீமையை அறிந்த, காண்கின்ற, அவர் சகல நிகழ்விலும் அவர்களது நன்மைக்கு ஏதுவாகவே செயலாற்றுகின்றார். நீங்களும் நானும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாவோம். அழைக்கப்பட்ட மக்களாவோம். நாமும் எமது வாழ்வில் அனைத்திலும் நன்மைக்கு ஏதுவாக செயலாற்றுகின்ற இறைவனைப் புகழ்வோம்.
புபுது பாடல் இல. 19 பாடலை பாடியவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

03. மீளப்பார்த்தல் :
கடந்தவார அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும்.

04. நாளுக்குரிய நற்செய்தி :- புனித லூர்க்கா 12:49-50

**“மண்ணுலகில் தீமூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆயினும் நான் பெற வேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு அது நிறைவேறுமளவு நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன்.”**

- நீங்கள் செவிமடுத்த திரு விவிலிய பகுதியின் வழியாக வெளிப்படுகின்ற இயேசு கிறிஸ்துநாதரின் உள்ளாந்திர அனுபவத்தை அருகில் இருக்கின்ற ஒருவருடன் பகிர்ந்து கொள்ளவும்.
- மண்ணுலகில் தீ மூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். இறை அரசைப் பற்றி, பற்றி எரிகின்ற தாகத்துடன் பேசுகின்ற எமது ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரினால் நிரம்பி இருக்கின்றார் என்பதை இப் பகுதியினூடாக தெளிவாகின்றது. அத் தீ பரிசுத்த ஆவியானவரின் அக்கினியாகும். கிறிஸ்துநாதரின் பிரசித்த வாழ்வினுள் செய்த ஒவ்வொரு செயல் வழியாகவும் வெளிப்படுத்திய ஒவ்வொரு வார்த்தை வழியாகவும் இவ் அக்கினி பற்றி எரிந்த ஒருவரினுள் இருக்க வேண்டிய தாகம். விழிப்புறுதல், அர்ப்பணம், தெளிவாக தெரிகின்றது.
- இப் பரிசுத்த ஆவியானவரின் அக்கினி வெறுமனே எரியாது, தீ பற்றியெரிந்து இயேசு ஆண்டவருக்கு சிலுவை மரணம் வரைக்கும் துன்புற, அடிபட. புறக்கணிப்பிற்கு உள்ளாக, அவமானப்பட நேரிட்டிருந்தது.

- மரணத்தாலும் அனைக்க முடியாத பரிசுத்த ஆவியானவரது அக்கினி பற்றி எரிந்த எம் ஆண்டவரின் உயிர்ப்பின் வழியாக உலகத்திலிருக்கின்ற அனைத்து மக்கள் மீதும் பற்றி எரிய தொடங்கியது. முழு உலகமும் உயிர்த்த ஆண்டவரை சந்தித்து இவ் அக்கினியால் பற்றி எரிந்து சாட்சி பகிர்வதற்கு உள்ளாகியது பரிசுத்த அக்கினியால் பற்றி எரிந்த எம் அண்டவர் பால் நோக்கியே ஆகும்.

04. எம் பக்கம்

- திருமுழுக்கு அழைப்பின் வழியாக உங்களுள் என்னுள் பரிசுத்த ஆவியானவரின் அக்கினி பற்றி எரியத் தொடங்கி உள்ளது. உறுதி பூசுதல் அருட்சாதனத்தின் வழியாக அவ் அக்கினி எரிந்து எரிந்து பற்றியெரியத் தொடங்கியது. மறுமலர்ச்சி அடைந்த கிறிஸ்தவ வாழ்வில் நித்தம் நித்தம் நாம் பெற்றுக் கொள்ளும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கினுள் இவ் அக்கினி எம் இதயங்களை பற்றி எரியச் செய்யும்.
- பரிசுத்த ஆவியானவரின் அக்கினியால் பற்றியெரிந்த ஒருவராக எமது பிரதிசெயல், வாழ்வின் சாட்சி எவ்வாறானது?
- இறை அரசிற்காக எரிகின்ற தாகம் உங்களுக்கும் எனக்கும் இருக்கின்றதா?
- துன்புறுதல், புறக்கணிப்பு, நிந்தனைக்குட்படல், தவறாக புரிந்து கொள்ளல் மூலம் கிறிஸ்து ஆண்டவர் அனுபவித்த அப் புதுமையான தாகம் என்பனவற்றை தூய தீயினால் மூடப்பட்ட ஒருவராக சாட்சி பகிர்ந்திடும் வரத்தை உங்கள் வாழ்க்கையில் அனுபவிக்கின்றீர்களா?
- எமக்குள் எரிகின்ற தூய தீயினை யாராலும் எதனாலும் அனைவதற்கு இடமளிக்காமல் ஆழமான தாகத்துடன் இறை அரசை அறிக்கையிடுவோம்.

06. இறுதிச் பகழ்ச்சி :

புபுது பாடல இல. 49 “ஆயத்தப்படுவோம்…”